17.12.2024 அ.வ. எண். 55/2021 வா.சா.1 லட்சுமி

<u>**குறுக்கு விசாரணை**</u>

எனக்கு திருமணமாகி 40 ஆண்டுகளாகிறது. என் அக்கா 2ம் வாதி அலமேலுக்கு திருமணமாகி 42 ஆண்டுகளிருக்கும். 1ம் வாதிக்கு திருமணமாகி சுமார் 45 ஆண்டுகளாகியிருக்கும். தாவா சொத்து ஏீன் தாயாருக்கு சொந்தமானது. என் தாத்தா பெயர் நல்லவண்டா மேஸ்திரி. அவர் பெயரில் பட்டா இருந்ததற்கான பட்டாவை தாக்கல் செய்யவில்லை. எனக்கு தெரிந்து வரதப்ப செட்டியும், என் தாயார் குப்பம்மாளும் தாவா சொத்தை அனுபவித்து வந்தார்கள். தாவா சொத்தில் ஒட்டுவீடு இருந்தது. அதில் தான் வரதப்ப செட்டியும், குப்பம்மாளும் வசித்து வந்தார்கள். என் உடன்பிறந்தது ஒரே சகோதரர் தான். அவர் பெயர் ஏழுமலை. ஏழுமலைக்கும் 1ம் பிரதிவாதிக்கும் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் ஆனது. ஏழுமலைக்கும், முருவம்மாளுக்கும் பிறந்தவர் தான் 2ம் பிரதிவாதி வள்ளி. ஏழுமலைக்கு திருமணமாகி 2 ஆண்டுகளில் இறந்துவிட்டார். நாங்கள் கூட்டுக்குடும்பமாக தான் இருந்துவந்தோம். திருமணத்திற்கு பிறகு என் கணவருடன் என் தாயார் வீட்டிற்கே வந்துவிட்டேன். வீட்டின் கதவு எண் தெரியாது. வழக்குரையில் கூறியுள்ள முகவரியில் என் பெற்றோர்கள் இருந்தபோது வசித்து வந்தேன், அதன்பிறகு வீடு இடிந்துவிட்டது என் அக்கா வீட்டிற்கு சென்றுவிட்டேன். பூந்தோட்ட தெருவில் உள்ள வீடு எங்களுடையது தான், அதை இப்போது தான் கட்டி முடித்தோம். வீடு கட்டிமுடித்து 15 ஆண்டுகளாக அனுபவித்து வருகிறோம். 1ம் வாதி என் தாயாருடன் இருந்துவந்தார். 1ம் வாதி அவர் கணவருடன் வசித்து வந்தாரா என்றால் எனக்கு தெரியாது. 1ம் வாதி புறம்போக்கு இடத்தில் வீடுகட்டிக்கொண்டு சென்று 4 ஆண்டுகள் இருக்கும். 1ம் வாதியை அரக்கோணத்தில் திருமணம் செய்து கொடுத்தார்கள், அவர் இங்கேயே வந்துவிட்டார். 2ம் வாதியை திரிபுலிவளம் ஊரில் திருமணம் செய்து கொடுத்தார்கள். 2ம் வாதிக்கு திரிபுலிவளம் ஊரில் சொந்த வீடு இல்லை. 2ம் வாதி திரிபுலிவளம் ஊரில் 2 ஆண்டுகள் இருந்தார், அதன்பிறகு இங்கேயே வந்துவிட்டார். 2ம் வாதி தனியாக வீடுகட்டி வசித்து வருகிறார். 2ம் வாதி வீடுகட்டி 15

ஆண்டுகள் இருக்கும். அவரவர்கள் வீடுகட்டியபிறகு தனித்தனியாக தான் வசித்து வருகிறோம். என்னுடைய சகோதரர் ஏழுமலை இறந்தபிறகு 1, 2 பிரதிவாதிகள் என்னுடைய தகப்பனாரின் அரவணைப்பில் தான் இருந்துவந்தார்கள் என்றால் சரிதான், நாங்களும் இருந்துவந்தோம். என் தாயார் இறந்து 18 ஆண்டுகள் இருக்கும். என் தகப்பனார் என் தாயார் இறந்து 1, 2 ஆண்டுகளுக்கு பிறகு இறந்துவிட்டார். வீடு இடிந்தபிறகு நாங்கள் தனியாக சென்றுவிட்டோம், அதே வீட்டில் தான் 1, 2 பிரதிவாதிகள் இருந்துவந்தார்கள் என்று சொன்னால் அவர்களும் வேறு வீட்டிற்கு சென்றுவிட்டார்கள். தாவா சொத்தில் இருந்த வீடு வழக்கு தாக்கல் செய்வதற்கு 1, 2 ஆண்டுகளுக்கு முன்பு இடிந்துவிட்டது. 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்தில் இருந்த வீடு இடியும் வரை வசித்து வந்தார்கள், அதன்பிறகு தான் வேறு இடத்திற்கு சென்றார்கள். 1ம் பிரதிவாதி வீடு இடிந்துவிட்டது என்றும் வீடு கட்ட நிதியுதவி கோரி அரசாங்கத்தில் மனு கொடுத்தார் என்றால் சரிதான். சிதிலமடைந்த வீட்டை சுத்தம்செய்த போது தான் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது. 1ம் பிரதிவாதிக்கு வீடுகட்ட அனுமதி வழங்ககூடாது என்று அரசாங்கத்திடம் ஆட்சேபனை செய்தோம். என் தகப்பனார் இறந்தபிறகும் 1ம் பிரதிவாதியிடம் பாகம் கேட்டுவந்தோம். ஏழுமலை இறந்துவிட்டதால் தாவா சொத்தை 1, 2 பிரதிவாதிகளுக்கு கொடுத்துவிடலாம் என்று என் தகப்பனார் சொன்னார். அப்போது எந்த ஆட்சேபனையும் செய்யாமல் என் தகப்பனார் இறந்து 20 ஆண்டுகளுக்கு பிறகு தான் ஆட்சேபனை செய்கிறோம். தாவா சொத்தில் இருந்த வீட்டை 40 ஆண்டுகளாக 1, 2 பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றும் 15 ஆண்டுகளாக நாங்கள் கூட்டாக அனுபவித்து வந்ததாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளாகிய நாங்கள் உள்ளூரில் வசித்துவந்தபோதும் அப்போது எந்த ஆட்சேபனையும் செய்யாமல் தற்போது ஆட்சேபனை செய்துவருகிறோம் என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு 4 ஏக்கர் நிலம் இருந்திருக்கும் அதை அப்போதே விற்றுவிட்டார். தாவா சொத்தை 1, 2 பிரதிவாதிகளுக்கு கொடுத்ததால் 4 ஏக்கர் நிலத்தை விற்று எங்களுக்கு தான் என்

தகப்பனார் சவரட்சனை செய்தார் என்றால் தவறு, 2ம் பிரதிவாதிக்கு தான் திருமணம் செய்துவைத்தார். வரதப்ப செட்டியின் தகப்பனார் பெயர் கோவிந்த செட்டி. தாவா சொத்திற்கான பட்டா 2021 ம் ஆண்டு வரை என் தகப்பனார் வரதப்ப செட்டி பெயரில் தான் இருந்தது. என் தகப்பனார் வாரிசு சான்றை வாங்கவில்லை. இறப்பு சான்றையும் வாங்கவில்லை. என் தகப்பனார் இறந்தபிறகு பட்டாவை எங்கள் பெயருக்கு மாற்றிக்கொண்டோம். பட்டா மாற்றம் செய்தது 1, 2 பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.